# மக்கள் மறுவாழ்வு

**இலங்கை கலவரத்தில் பாதிக்கப்பட்டோர் விபரம் (உள்ளே)**

மலர் : 2 • நவம்பர் 1983 • விலை 75 காசு • இதழ் : 3


## இலங்கையிலிருந்து குடிப்பெயர்ந்து வரும் மக்களுக்கு

# உரிய பாதுகாப்பு இல்லை

**இலங்கையிலிருந்து ஒப்பந்தத்தின் மூலமும், சமீபத்தில் நடந்த கலவரத்தினாலும் குடிப்பெயர்ந்து வரும் மக்கள் இராமேஸ்வரத்திலும் மண்டப முகாமிலும் வியாபாரிகளாலும் இடைத் தரகர்களாலும் போர்ட்டர்களாலும் துன்பத்திற்கும் தொல்லைக்கும் உள்ளாகி வருகிறார்கள் இவர்களுக்கு அங்கே தக்க பாதுகாப்பில்லை; கண்காணிப்பு இல்லை.**

பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாட்டில் வாழ முடியாமல், 'தாயகத்திலாவது உரிமையோடு வாழலாம்– நிம்மதியாக காலத்தை தள்ளலாம் என்ற நம்பிக்கையோடு இலங்கையிலிருந்து பலர் வந்துக்கொண்டிருக்கிறார்கள்.

சிறிமாவோ–சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் குடிப்பெயர்ந்து (Repatriates) ம், சமீபத்தில் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாக (Refugees) வரும் இவர்கள், இராமேஸ்வரத்தில் கால் எடுத்து வைத்ததுமே அவநம்பிக்கைக்குள்ளாகிறார்கள்.

பிறந்து வளர்ந்து வாழ்ந்தும் அந்த நாட்டிற்கே தங்கள் இரத்தத்தையும் வியர்வையும் சிந்தியும் வாழ உரிமையில்லாதவர்களாக நாடு கடத்தப்படும் மக்களாக வரும் அவர்கள்-ஜூலையில் அங்கு நடந்த இனக்கலவரத்தால் தமது உடைமைகளையெல்லாம் இழந்து- இனக்கொலைக்கு தமது உற்றார் உறவினர்களை கூட- இழந்து அகதிகளாக வரும் அவர்கள் இங்கே 'பணம் காய்க்கும் மரங்களா'கவே பலரால் கருதப்படுகிறார்கள்.

இந்தஎண்ணத்தோடு இவர்களை எந்தெந்த வகையில் சுரண்டலாம், கொண்டு வரும் பொருட்களைக் 'கொள்ளை' யடிக்கலாம் என்றெல்லாம் இவர்களை முற்றுகையிடுகிறார்கள்.

இராமேஸ்வரம் மண்டபம், மண்டப முகாமில் இவர்களில் தொல்லைகள், கொடுமைகளுக்கு இலங்கையிலிருந்து வரும்யாரும் தப்புவதில்லை இராமேஸ்வரம கரையில் காலடி வைப்பவர்கள், மண்டப முகாமை தாண்டினால்தான் நிம்மதியாக பெருமூச்சு விடுகிறார்கள். அந்த அளவிற்கு இவர்களை நாடிவரும் வியாபாரிகளின் இடைத்தரகர்களின் ஆட்சி இந்த பகுதிகளில் நடைபெறுகிறது,

### வியாபாரிகள் என்ற பெயரால்

கப்பலை விட்டு இறங்கி, சுங்க பரிசோதனைகள் முடிந்து வெளியே வந்ததுமே வியாபாரிகள் என்ற பெயரால் இவர்களை பலர் அணுகுகிறார்கள் அவர்கள் கொண்டுவரும் பொருள்களைகுறைந்தவிலைக்கு, 'கொள்ளை' விலைக்கு பேரம் பேசி சுருட்டிக்கொண்டு போகிறார்கள் அவர்களது பேரத்திற்கு படியவில்லை என்றால் பயமுறுத்தப்படுகிறார்கள் 'கஸ்டம்ஸ்காரர்கள், போலீஸ்காரர்கள் பிடித்துக் கொள்வார்கள். நீங்கள் கொண்டு போவது சிரமம் என்று எல்லாம் பேசி ஏமாற்றுகிறார்கள் இந்த ஏமாற்றுக்கெல்லாம் படியாவிட்டால் பலாத்காரத்திலும் ஈடுபடுகிறார்கள்.

இலங்கையிலிருந்து திரும்புகிறவர்களில் பெரும்பான்மையோர் தோட்டத் தொழிலாளர்கள்; அப்பாவி மக்கள்; எதையும் செய்ய வகையற்றவர்களாக இவர்களிடம் பறிகொடுக்கிறார்கள் இது மாதிரி தாம் கொண்டு வந்த பொருட்களை இழந்து இன்னல்களுக்கு உள்ளானவர்கள்பலர்.

### போட்டார்களின் தொல்லைகள்

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோர் அகதிகள் தங்கள் முகாமுக்கு பொருட்களை (லக் கேஜ்களை) ரயில்வே நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லும் போதோ—கொண்டுவரும் போதோ போட்டர்களால் தொல்லைக்குள்ளாகிறார்கள் தொட்டதற்கெல்லாம் : பணம் பறிக்கிறார்கள் மண்டபம் குடிப்பெயர்ந்தோர் முகாமிலிருந்து ரயில்வே ஸ்டேசனுக்கு லக்கேஜ்களை கொண்டு வருவதற்கும், வண்டிகளிலிருந்து இறக்குவதற்கும், ஸ்டேசனுக்குள் தூக்கிக் கொண்டு போவதற்கும், நிறுப்பதற்கும், லக்கேஜ் பெட்டியில் நம்பர் இடவும், குடிப்பெயர்ந்தோருக்கு கட்டணம் செலுத்த சலுகை அளிக்கப்பட்டுள்ள எடையைக்கழித்து ரசீது போடுவதற்கும், உடனடியாக ரயிலில் ஏற்றுவதற்கும், என்று தனித்தனியாக பணம் பறிக்கிறார்கள் அவர்கள் கேட்பதைக் கொடுக்காவிட்டால் அங்கு ஒன்றும் நடக்காது ரயிலில் ஏற்ற பணம் கொடுக்காவிட்டால் அந்த லக்கேஜ்

(கடைசி பக்கம் பார்க்க)

மக்கள் மறுவாழ்வு

மலர் : 2] நவம்பர் '83 [இதழ் : 3

## இலங்கைத் தமிழர் பிரச்சனை எதிரொலிக்க வேண்டும்

இம்மாத இறுதியில் காமன்வெல்த் நாடுகளின் மாநாடு டெல்லியில் நடக்கிறது. இந்த மாநாட்டில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனை எதிரொலிக்கச் செய்ய வேண்டும்.

மனித உரிமைகள் பற்றியும், ஒரு நாட்டில் சிறு பான்மைகளுக்கு அளிக்கப்பட வேண்டிய சமத்துவம் குறித்தும் காமன் வெல்த் நாடுகள் சபையும் வலியுறுத்தி வருகிறது.

ஆனால் அதில் அங்கம் வகிக்கும் பிரிட்டனும், இலங்கையும் அதன் கொள்கைக்கு மாறாகவே இலங்கைத்தமிழர் பிரச்சனையில் நடந்துள்ளன.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது சிறுபான்மை மக்கள் புறக்கணித்தபோதும், இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட போதும் பிரிட்டிஷ் ஆட்சியினர் சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிரச்சினையை அலட்சியப்படுத்தியதோடு பராமுகமும் காட்டினர் இன்றைய சிறிலங்கா சிங்கள இனவாத அரசும் சிறுபான்மையினராக இருக்கும் தமிழ் மக்களின் உரிமைகளை பறித்து எடுத்து அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது அதன் பேரினவாதக்கொள்கையில் சுதந்திரத்திற்கு பின்னால் இன்று வரை ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்று குவித்துள்ளது இன்றைக்கு இலங்கைத் தமிழர் உரிமைக்காகப் போராடும் வேளையில், அப்போராட்டத்தை முறியடிக்கும் வகையில், பிரிட்டன் போராயுதங்கள் வழங்கி வருவதாகவும், ஸ்ரீலங்கா அரசுக்கு தனது ஆதரவை வழங்கிவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

...இது காமன் வெல்த்தின் கொள்கை பிரகடனத்திற்கு முரணானதும், விரோதமானதுமாகும் இப்படிப்பட்ட முரணான போக்கில் இயங்கும் பிரிட்டனும் இலங்கையும் காமன் வெல்த்தில் அங்கம் வகிக்கின்றன; இந்த மாநாட்டிலும் கலந்து கொள்கின்றன.

இந்த தருணத்தில் இந்த மாநாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சனையை எடுத்து வைக்க வேண்டுமென்பதோடு, முரணாகவும், விரோதமாகவும் இயங்கும் இந்த நாடுகளின் முகத்திரையையும் கிழிக்கவேண்டும்.

# போர்க்கால பணிகள் போல மறுவாழ்வு உதவிகள் துரிதமாக வழங்கவேண்டும்!

ஸ்ரீமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தில் இலங்கையிலிருந்து குடிப்பெயர்ந்து வந்துக்கொண்டிருக்கிறார்கள் இவர்கள் ஒப்பந்தத்தின் மூலம் மட்டுமல்ல; சமீபத்தில் நடந்த இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டும் வருகிறார்கள்

கடந்த காலத்தில் அந்த தொகையை விட இனி வருவோர் அதிகமாகவே இருக்கும் வருகிறவர்கள் அங்கே இனக் கலவரத்தால்பாதிப்புக்கு உள்ளாகி, மிக நெருக்கடிகளோடே வந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மக்களுக்கு போர் காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கை போல அளிக்கப்படும் உதவிகள் போல மிகவும் துரிதமாக மறு வாழ்வு உதவிகள் அளிக்கப்பட வேண்டும்

ஒப்பந்தத்தின் மூலம் வருகிறவர்கள் போக, இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு அங்கு வாழவே முடியாதென்ற நிலையில் அங்கு குடியுரிமை பெற்றோரும் இங்கு அகதிகளாக வந்துக்கொண்டிருக்கிறார்கள் இவர்களை அகதிகளாக அங்கீகரித்து, இலங்கையில் அவர்களது பிரச்சனை தீர்ந்து அங்கு அமைதி ஏற்பட்டு மீண்டும் அங்குசென்று வாழும் சூழ்நிலை ஏற்படும் வரை அவர்களுக்கு தற்காலிகமாக மறு வாழ்வு உதவிகள், துயர் துடைப்பு நிவாரணங்கள் அளிக்க வேண்டும்;

மறுவாழ்வு உதவிகள் வழங்குவதில் ஏற்படும் கால தாமதத்தையும் மந்த போக்கினை நீக்கி உடனடியாக அளிக்கப்படவேண்டிய உதவிகளை அளித்து அவர்களுடன் தமது மறுவாழ்வினை ஏற்படுத்திக்கொள்ள வழிகள் செய்ய வேண்டும். துரிதமாக செய்வதன் மூலம் இடைத்தரகர் போன்ற சமூக விரோதிகளிடம் இருந்து அவர்கள் தப்ப முடியும்.

இவர்கள் மத்தியில் பணி செய்கின்ற சமூக நல அமைப்புகள். தன்னார்வ நிறுவனங்கள் இவர்களுக்கு துரிதமாக அளிக்கப்பட வேண்டிய உதவிகளை மனத்தில் கொண்டு ஒருங்கிணைந்து செயல்பட்டு இம்மக்களுக்கு உதவ வேண்டும். அவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் அளிக்க முன் வர வேண்டும் ஆங்காங்கே குடியமரும் அவர்களுக்கு தகுந்த வழிகாட்டியாக நின்று துணைபுரிய வேண்டும். வன் செயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை தாய் தந்தையரை இழந்த குழந்தைகளை தத்தெடுத்து பாதுகாக்கவும், அவர்கள் கல்விகற்கவும் முன் வர வேண்டும்.

-மோகன் குமார்

## 8 ஆயிரம் பேர்

இலங்கைக் கலவரத்துக்குப் பிறகு ராமேசுவரம் தலைமன்னார் படகு போக்குவரத்துத் தொடங்கப்பட்டது அல்லவா? அப்போது 7875 ஒப்பந்தத்தின் மூலம் குடிபெயர்வோரும், கலவரத்தில் பாதிக்கப்பட்ட 426 அகதிகளும் ராமேஸ்வரம் வந்தனர்.

கடந்த 23-ந் தேதிக்குப் பிறகு மீண்டும் படகு போக்குவரத்து செய்யப்பட்டு உள்ளது.

## மக்கள் மறுவாழ்வு நாடறிய செய்கிறது

இலங்கையிலிருந்து சிரிமா சாஸ்திரி மற்றும் இந்திரா சிரிமா உடன்படிக்கையின் கீழ் 6 லட்சம் இந்திய வம்சாவளி தமிழர்கள் குடி பெயர்ந்து தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்

இது போதாதென்று அண்மையில் அங்கு நடைபெற்ற வரலாறு காணாத இனப்படு கொலையால் பாதிக்கப்பட்டு மேலும் பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக இங்குவந்து சேரக் கூடிய நிலைமை உறுவாகிவிட்டது

"யாழ்ப்பாணத்திற்குப் (தமிழ் பிரதேசங்களுக்கு) போகாதே, இந்தியாவுக்குப் போ" என்ற கோசத்தை சிங்கள தீவிர வாதிகள் முடுக்கிவிட்டிருப்பதாக அகதிகளாக வருவோரிடமிருந்து அறிய முடிகிறது. இதனால் இலங்கையில் பிறந்து வளர்ந்தோர்— பிரஜா உரிமை வாக்குரிமை உள்ளோரும் கூட பல ஆயிரக்கணக்கானோர் குடிபெயர்த்து இங்கு வரவிருப்பது உறுதியாகிவிட்டது.

இவ்வாறு வந்து சேருபவர்கள் பிரச்சனைகள் பலவற்றை எதிர் நோக்குவார்கள். தொல்லைகளுக்கு ஆளாவார்கள் அவர்களின் பிரச்சனைகளை நாடறிய உலகறிய எடுத்துச் சொல்லவும் வழிகாட்டவும் தங்களின் "மறு வாழ்வு" மாத ஏடு பாடுபடுவதைக் காண மகிழ்ச்சியடைகிறேன்

நாட்டில் அனைத்து தரப்பினரும் ஆதரவுகளைப்பெற்று "மக்கள் மறுவாழ்வு" மேலும் மேலும் வளர எனது நல்லாசியை உரித்தாக்குகிறேன்.

**அருள்தாசன்**

தாம்பரம்



# எங்கள் பிரச்சனைகள்

## தாயகம் நம்பி வந்த எங்களை தவிக்க வைக்கலாமா?

ஐயா!

எட்டப்பன் பரம்பரையைச் சார்ந்தவர்கள் தமது சுயநலத்திற்காகவும் பதவிக்காகவும் நமது இரத்தங்களை, அகதிகளாக்கத் திட்டமிடுவதை 'மக்கள் மறுவாழ்வு' மூலம் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளீர்கள். இனியாவது இலங்கையின் பலையக மக்கள் இவர்களை இனம்கண்டு கொள்வார்களா?

இலங்கை தமிழர்களை இலங்கை அரசு திட்டமிட்டு தாக்கியதற்காக தமிழ் நாட்டில் உள்ள ஆளும் கட்சி மந்திரிகள் முதல் தொண்டர்கள் வரை கருப்புச்சட்டை அணிந்து கண்டனம் தெரிவித்துள்ளதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்

ஆனால் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிக் குடியேறியோர் விஷயத்தில் ?

தமிழ் நாட்டில் அருப்புக்கோட்டை தாலூகாவில் உள்ள மல்லாங்கிணறு என்னுமிடத்தில் உள்ள சிறி அய்யனார் நூற்பாலையில் இலங்கையிலிருந்து வந்த வேலைபார்த்து வந்த 160 தொழிலாளர் அதிமுக்கிய பிரச்சனைகளால் அல்லல்பட்டு வருகிறார்கள் அவர்களுக்கு தொழிலாளர் நல சட்டப்படி கிடைக்கவேண்டிய சம்பளம் போன்ற உரிமைகளை கேட்டு போராடிவருகிறோம். இப்படி உரிமைக்காக போராடிய 100 குடும்பங்கள் வாழும் அண்ணாவின் நாமத்தையுடைய காலனியில் ஜூன் மாதம் 5ம் திகதி அதிகாலை, எல்லோரும் படுத்துறங்கிக் கொண்டிருந்த வேளையில் நூற்பாலை நிர்வாகத்தின் அடியாட்கள் பலரும், ஆளும் கட்சியைச் சேர்ந்த பலரும் சேர்ந்து வந்து 49 வீடுகளை சூறையாடி 19 நபர்களுக்கு இரத்த காயங்களும் ஏற்படுத்தினார்கள் இது சம்பந்தமாக, தமிழ் நாட்டிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் தெரிவித்தும் பிரச்சனைகள் தீர்க்கப் படவில்லை. கடந்த 5 மாதங்களாக 100 குடும்பங்கள் வேலையிழந்து தவித்துக் கொண்டிருக்கிறது பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே காலம் கடத்தி வரும் அதிகாரிகளின் மெத்தனப் போக்கையும் ஆளும் கட்சியின் நடவடிக்கையையும் கண்டிப்பது யார்? இவர்களைக் கண்டித்து எங்களுக்காக யார் கருப்புச்சட்டை போடுவது?

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி குறித்தும் எழுத விரும்புகிறேன். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் கொத்தடிமைகளை மீட்டுவந்து மறுவாழ்வு அளிப்பதாக பத்திரிகைகளில் கொட்டெழுத்துகளில் செய்திகள் போடப்படுகிறது. ஆனால் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியே தலை நிமிர்ந்து வாழ தாய் நாட்டில் வழி பிறக்கும் என்று இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிருக்கு நம்பி வருகிறவர்களை தனியார்களிடம் 'விற்று' விடுகிறது இதை நான் அந்த வங்கியின் பேரவை பிரதிநிதி என்ற உரிமையில் எழுதுகிறேன்— இதை மத்திய அரசின் கவனத்திற்கு 'மக்கள் மறுவாழ்வு' கொண்டு செல்ல வேண்டும் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன்.

எங்கள் பிரச்சனைக்குறித்து அரசுக்கு எண்ணற்ற மனுக்களை அனுப்பியும் எந்த பலனும் இல்லை. எங்களை தவிக்க விட்டு பிச்சை எடுக்கும் நிலைக்குத்தான் ஆளாக்கியுள்ளது

நாங்கள் கேட்கும் கோரிக்கைகள் தவறானதா? இல்லையா முறையானதா? முறையற்றதா? இந்த கோரிக்கை சட்டத்திற்கு கட்டுப்பட்டதா? இல்லையா? இப்படி பிரச்சினைகள் உருவாகக் காரணம் என்ன? தீர்க்க முடியாதா? இவற்றை எல்லாம் நாங்கள் தெரிந்து கொள்ளவும், இனி வரும், வந்து கொண்டிருக்கிற - வந்து எங்களைப்போல தவிக்கின்ற அனைவருக்கும் ஒரு நல்ல வழி காட்டியாக நின்று 'மக்கள் மறுவாழ்வு' சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துரைக்குமா?

**எஸ் எம். வேலு**

மல்லாங் கிணறு

புதிய பகுதி

## சட்ட ஆலோசனைகள்

சட்டப் பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட
விடயங்கள்—ஆலோசனைகள்
விரைவில் ஆரம்பமாகவிருக்கிறது

# குடிநீர் அசுத்தமாகிறது அதனால் நோய் பரவுகிறது

இந்தியாவின் 88 சதவீதப் பிரதேசத்தை உள்ளடக்கியுள்ள 14 பெரிய நதிகளின் வடிகால் பிரதேசத்தில் மொத்த மக்கள் தொகையில் 80 சதவீதத்தினர் வாழ்கின்றனர். என்றாலும் முன்சாக்கிரதை உணர்வோ கவலையோ அற்ற வகையில் தடையற்ற தொழில்மயமாக்குதலினாலும், சுற்றுப்புற சூழ்நிலையையிட்டு தக்க திட்டமிடாதபடி வளர்ந்து வரும் குடியேற்றங்களாலும் நீர் அசுத்தமாக்கப்படுவது வருத்தத்துக்குறியது.

6வது ஐந்தாண்டு திட்ட அறிக்கைப்படி வடக்கே தால் ஏரி முதல் தெற்கே பெரியார், சாலியார் ஆறுகள் வரையும் கிழக்கே ஹூக்ளி முதல் மேற்கே தானா கிரேக் வரையிலும் கவலை தரத் தக்க வகையில் நீர் அசுத்தப்படுத்தப்படுகிறது கங்கை போன்ற பெரிய நதிகள் கூட மிகப் பெரிய அளவில் அசுத்தமாக்கப்படுவதாக அவ்வறிக்கை கூறுகிறது. அரசாங்கம் இவற்றைப் பெரிது படுத்துவதில்லையென்பது நாமறிந்ததே.

கங்கை நதியே மிக அதிகளவில் அசுத்தப்படுத்தப்படும் நதியாகும். மிக மோசமாக வாரணாசியில் (Benaras) சுடலையில எரியூட்டப்பெற்று பாதி வெந்த சடலங்கள் கங்கையில் எறியப்படுகிறது.

தாமோதர் பள்ளத்தாக்கு அப்பகுதியில் உள்ள இரசாயன மற்றும் உலோகத் தொழிலகங்களிலிருந்து வரும் கழிவு நீரால் அசுத்தப் படுத்தப்படுகிறது சாதாரணமாக ஒரு லிட்டருக்கு 100 மில்லிகிராம் அளவே இருக்க வேண்டிய கழிவு உப்புக்கள் இந்த நீரில் ஒரு லிட்டருக்கு ஒரு லட்சம் மில்லி கிராம அளவுக்கு இருக்கின்றது. சுற்றுப்புற சூழல் குறித்து ஆய்வு செய்யும் அறிஞர்கள் இன்னும் சில ஆண்டுகளில் கங்கை, தாமோதார் என்பவற்றின் வடிக்கப்பட்ட நீர் கூட குடிப்பதற்கு அற்றதாக இருக்கும் எனக்கூறுகின்றனர்.

இராஜஸ்தானின் பெரிய நதியான சம்பல் நதியின் நீர் மனிதர்களுக்கு மட்டுமின்றி மிருகங்களுக்கும் குடிப்பதற்கு லாயக்கற்றது இந்நீரால் மீன்களும், கால் நடைகளும் இறப்பது மட்டுமின்றி நிலத்தடி நீர் கூட பாதிக்கப்படுகிறது. கோடா அணுசக்தி நிலையத்திலிருந்து வரும கடின நீர் மற்றும உரத் தொழிலங்களிலிருந்து வரும் தொழிற்சாலை கழிவு நீர் ஆகியன சம்பல் நதி நீரின் தரத்தைப் பாதிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

டெல்லிநகரில் ஒடும் யமுனை நதியில் 20 கோடி லிட்டர் சாக்கடை நீரும், 2 கோடி லிட்டர் தொழிலகக் கழிவு நீரும் கலக்கின்றன டெல்லிக்கும் ஆக்ராவிற்குமிடையே ஒடும் யமுனையின் நீர் குடிப்பதற்கு லாயக்கற்றது எனில் ஆச்சரியப்படுவதற்கல்ல இதுபோல் இன்னும் எவ்வளவோ அடுக்கிக் கொண்டே போகலாம்.

மனிதக் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளாலும், தொழிலக கழிவுகளாலும் நாட்டின் ஆறுகள் ஏரிகளின் 80 சதவீத நீர் அசுத்தமாக்கப்படுகிறது பாதரசம் போன்ற கறையும் திறனற்றதும், மிகக்கேடு விளைவிக்கக் கூடியதுமான இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளதால் தொழிலகக் கழிவுநீரால் அசுத்தப்படுத்தப்படும் நீர் மனிதர்களுக்கும் கால் நடைகளுக்கும் மிக அபாயம் விளைவிப்பதாக உள்ளது இது போலவே மனிதக் கழிவுகள் கலக்கும் நீர் கடும் தீமை விளைவிக்கும் மஞ்சட்காமாலை, டைபாய்டு, பேதி போன்ற நோய்களைப் பரப்புகின்றது

உண்மையிலேயே இந்தியவில் 2/3 பகுதி நோய்கள் நீர் சம்பந்தப் பட்டனவயாகும் இந்தியர்களில் ஒவ்வொரு மூன்று பேருக்கும் ஒருவர் சுத்தமான நீரின்மையாலும், போதுமான சுகாதார வசதியில்லாமையாலும் பாதிக்கப்படுகின்றார் என்றாலும் வியப்பல்ல.

நதிநீர் அசுத்தமாக்கப் படுவதற்குத் தொழிலகங்களும், நகராட்சி அமைப்புகளும் இரு பெரும் குற்றவாளிகளாகும் 1974ன் நீர் தடுப்பு மற்றும் அசுத்தப் படுத்தல் கட்டுப்பாடு சட்டம், மற்றும் இதன் அமுலாக்கத்தை உறுதிப் படுத்த பிராந்திய அமைப்புகள் அமைத்தலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டன தொழிலகங்கள் இவ் விதிகளில் இருந்து தப்பிக்க பல வழிகள் வைத்துள்ளன.

இண்டியன் எக்பிரஸிலிருந்து:

- செல்வராஜ்

# இது இங்கு நடக்குமா ?

வேலைக்காக இந்தியாவிலிருந்து அழைத்துச்செல்லப் பட்ட 18 வயது சிறுமியை திருப்பி அனுப்பும்படி மேற்கு ஜெர்மனி அரசு உத்தரவு பிறப்பித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

பள்ளிக்கு அனுப்பி படிக்க வைக்காமல் 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகளை வேலைக்கு அனுப்பக் கூடாது என்ற சட்டம் மேற்கு ஜெர்மனியிலுள்ளது. அந்த சட்டத்தைக் சுட்டிக்காட்டி மேற்படி உத்தரவையிட்டனர்

மேற்கு ஜெர்மனியில் வாழும் இந்தியக் குடும்ப மொன்று, வீட்டு வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து அந்த 18 வயது சிறுமியை அழைத்து சென்று வேலைக்காரப் பெண்ணும் வைத்திருக்கின்றனர்

இதையறிந்த மேற்கு ஜெமனி அரசு அதிகாரி இதை கண்டித்து மேற்படி உத்தரவையிட்டனர்.

அந்த குடும்பமோ, 'அந்த சிறுமி ஏழைக்குடும்பத்தைக் சேர்த்தவள் படிக்கவைக்கவே இங்கு அழைத்து வந்திருக்கிறோம் இப்போது ஜெர்மன் மொழி பயில்கிறாள்' என்று கூறியிருக்கிறார்கள் அதிகாரிகள் அவள் படித்த பள்ளியில் சென்று சோதனையிட்ட போது அந்த சிறுமி 23 நாட்கள் மட்டுமே பள்ளிக்கு போயிருக்கிறாள் அந்த நாட்டுக்கு அழைத்து செல்லப்பட்டோ 19 மாதங்கள்.

அதிகாரிகள் இதைகண்டித்து உடனடியாக அந்த சிறுமியை இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என கட்டளையிட்டது. அதற்கு சம்மதித்தும் அனுப்பாமலே மாதங்கள் கடந்தன. அதிகாரிகள் விடுவதாக இல்லை மீண்டும் கடுமையான உத்தவையிட்டனர்.

இப்படி அங்கு நடக்கிறது அது இங்கே நடக்குமா? சிறுவர்களை வேலைக்கு வைக்க கூடாது. கட்டாய கல்வி வழங்க வேண்டும் என்றெல்லாம் இங்கே சட்டங்கள் உண்டு,

ஆனால் இந்த நாட்டின் லட்சக்கணக்கான குழந்தைகள் பள்ளிக்கு போகும் வசதியே இல்லாதவர்களாக இருக்கிறார்கள், வறுமையினால் உழைக்கும் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். வயது வந்த தொழிலாளர்களைப் போல இவர்கள் கடும் உழைப்பாளர்களாக இருக்கிறார்கள் ஆயினும் அவர்களின் உழைப்புக்கு தக்க ஊதியமோ உறைவிடமோ இல்லாது கொத்தடிமைகளாகவும இருக்கும் நிலைதான் இங்கே இருக்கிறது

ப

# இலங்கையில் நடந்த ஜூலைக் கலவரத்தில் இறந்தோர்-பாதிக்கப்பட்டோர் எத்தனை பேர்?



இலங்கையில் இந்தஆண்டு ஜூலை-ஆகஸ்ட்டில் நடந்த இனபடுகொலைகள், கலவரங்களால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

இதற்கு முன் நடந்த கலவரங்களில் ஏற்படாத பாதிப்புகள் : இந்த கலவரத்தில் ஏற்பட்டுள்ளது. கடந்த கலவரங்களை விட இந்த கலவரம் மிக மாறுபட்டவகையில் நடந்துள்ளது.

எந்த கலவரத்திலும் நடக்காத வகையில் இந்த கலவரத்தில் இலங்கையின் தலைநகரமான கொழும்பு நகரமே பதிக்கப்பட்டுவிட்டது ஆயிரக்கணக்கான தமிழர்களின் வீடுகள், கடைகள் தொழில் நிலையங்கள் கொள்ளை அடிக்கப் பட்டு தீக்கிரையாக்கப் பட்டன; பலர் கொல்லப்பட்டார்கள். கொழும்பு நகரைப் போல இலங்கையின் மத்தியபகுதியிலுள்ள மலைநாட்டு நகர்களிலும கடைகள், வியாபார நிலையங்கள் அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டன.

ஸ்தாபன ரீதியாக திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த இனக் கலவரத்தில் இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர்களே வெகுவாக பாதிப்புக்குள்ளானார்கள்

மலையகத்தில் நகரங்களில் மட்டுமல்ல; தோட்டங்களிலும் தமிழ் தொழிலாளர்களுடைய 'லயன்' கள் தீக்கிரையாக்கப் பட்டது. உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள். இனி இந்த மண்ணில் சிங்களமக்களோடு உயிர்பயமின்றி வாழ முடியாது என்ற நிலைக்கு வரும் அளவில் இந்த இனத் கலவரத்தில் மலையகத் தமிழ்மக்கள், இந்தியத் தமிழ் வியாபாரிகள் தொழிலதிபர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தகலவரத்தில் கொழும்பு நகரில் அரசு துறையில் பணி செய்த பல தமிழ் உத்தியோகத்தவர்களும் பாதிக்கப்பட்டு அகதிகளாக தமிழ்ப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டார்கள் இவர்களை இந்தியக் கப்பல்கள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு சென்றன.

மலையக நகரங்களிலும் தோட்டங்களிலும் சிங்களக் கடையர்களே இனக்கலவரத்தையும், படுகொலையும் நடத்தினர்; அவர்களுக்கு போலீஸும் ராணுவமும் துணை நின்றிருக்கிறது.

தமிழ்பிரதேசத்தைப் பொருத்த வரை இராணுவத்தினரே முழுக்கமுழுக்க இனக் கொலைகளில் ஈடுபட்டனர்.

தமிழ் பிரதேசமான ஈழப் பகுதியிலும், மலையகத்திலும், கொழும்பு நகரிலும நடந்த இந்த இனப்படுகொலையில் இனக்கலவரத்தில் எவ்வளவு பேர் மாண்டார்கள் எவ்வளவு பேர் தமது உடமைகளை இழந்தார்கள்? எவ்வளவு பேர்களுடைய வீடுகள், கட்டிடங்கள், கடைகள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன? எவ்வளவு பேர் ஏதிரிகளாகி இருக்கிறார்கள்? இன்னும் இந்த விபரங்கள் சரிவர தெரியவில்லை.

இலங்கை அரசுப், அரசு நிறுவனங்களும் தந்துள்ள புள்ளி விபரங்கள் திருப்தியளிப்பதாக, சரியானதாக இல்லை. முன்னுக்குப்பின் முரணாக, போதுமான தகவலை தருவதாக இல்லை.

25-8-83 அரசிறை இதழ் 'ஹென்சாட்' டில் இலங்கை பிரதம மந்திரி தரும் தகவல்:

கொலைகள் 823; தீவைப்பு 1484; கொள்ளை 195; கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் 872 அகதிகளாகமுகாம்களில் சேர்க்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 80,000 ஆகும்.

31-8-83 சன் பத்திரிகையில் இலங்கையின் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தரும் தகவல்;

கொலை 385, வீடிழந்தவர்கள் 100,000 ஆகும்.

மலையகத்தில் தேயிலை, ரப்பர் தோட்டங்களை நிர்வகித்து வருகின்ற மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை (JATHIKA ESTATE DEVELOPMENT BOARD)யும் பெருந்தோட்ட கூட்டுஸ்தாபன (SRILANKA STATE PLANTATION CORPORATION)மும் தத்தமது விவரங்களை கொடுத்துள்ளன.

'மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை' தந்துள்ள விபரம்:

தோட்ட உத்தியோகத்தர் வீடுகள் சேதம 78; தொழிலாளர் லயன்கள் 1684 கொல்லப்பட்டவர்கள் 8, காயப்பட்டவர்கள் 48, பாதிக்கப்பட்டவர்கள் 10,812 பேர் ஆகும்.

பெருந்தோட்ட கூட்டுதாபனம் தந்த விபரம்;

பாதிக்கப்பட்டவர்கள் 6,250 பேர் என்பது மட்டுமே.

28-7-83, 27-5-83 ஆகிய திகதிகளில் வெலிக்கடைச் சிறையில் இருந்த 54 தமிழ்க் கைதிகள், சிங்கள இன வெறியர்களால் கொல்லப்பட்டனர்.

சென்னை, ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய(P1) த்தின் தகவல்படி திருமலையில் 469 பேரும் யாழ்ப்பாணத்தில் 60 பேரும் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார்கள்- இது திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இரு பகுதிகளில் மாத்திரம கிடைக்கப்பட்ட தகவல்கள்; இதுவும் கிடைத்தவரை உள்ள தகவல்களே மற்ற பகுதிகளிலும் இராணுவத்தினரால் நடந்த கொலைகள் பற்றிய விவரம் கிடைக்கவில்லை.

மலை நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் எவ்வளவு என்பது இன்னும் வெளிவரவில்லை. மலையகத்தில் பொதுப்பணியில் ஈடுபட்டு சேவையாற்றிவரும் 'ஆதவன்' தாம் செய்த ஆய்வுப்படி சில தகவல்களை அனுப்பியுள்ளார். அவரும் மலையகத்தின் மிகச் சில பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி தகவல்கள் மட்டுமே அனுப்பி உதவியிருக்கிறார். மலையகத்தின் மத்தியப் பகுதியில் இருக்கும் நுவரெலியா நகருக்கும், அதற்கு தென்கிழக்கே இருக்கும் பதுளைக்கும் இடையிலுள்ள பதுளை, வெளிமடை, பசறை லுனுகெல ஹாலிஎல, பண்டாரவளை, அப்புத்தளை, பெரகல ஜங்சன், கலுதுமுள்ள ஆவடி தென்ன, மொனராகலை, நுவரெலியா, கந்த பொல மற்றும் எட்டியாந் தோட்ட புலத்ஹோபிட்டிய ஆகிய பகுதிகளே அந்தசிலபகுதிகள்.

அவர் தந்துள்ள தகவல்படி தீக்கிரையாக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட வீடுகள் 43 : கடைகள் 658; பள்ளிக்கூடங்கள் 8; கோயில்கள் 5; அச்சகங்கள் 5 தியேட்டர்கள், 3 வங்கி, 1 வாகனங்கள் 1 5 16 வீடுகள் கொள்ளை அடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப் பட்டன். பதுளையிலும், நுவரெலியாவிலும் அகதிகளானோர் 9, 952 பேர்கள்.

தமிழர்களுக்கு சொந்தமான கடைகளுக்கு தீவைக்கப்பட்ட போது, அந்த கடைகளுக்கு பக்கத்திலிருந்த சில சிங்கள கடைகளும், முஸ்லிம் கடைகள் கூட தீக்கிரையானது இங்கே குறிப்பிடத்தக்கது

(தொடர்ச்சி நடுப்பக்கம்)

# இலங்கை மலைத் தோட்டத் தொழிலாளர்களின்

# குடியுரிமைப் பிரச்சனை

1 1802ல் அமீன் சமாதான உடன்படிக்கையின்படி ஆங்கிலேயர்கள் இலங்கையின் கடற்கரைபகுதிகளையும் அதையடுத்து யுத்ததந்திரங்களின் மூலம் படைகளைக் கொண்டு மீதிப் பகுதிகளையும் 1815லும் கைப்பற்றிக் கொண்டனர்.

2 பிரிட்டிஷ் காலனி நிர்வாகம் 'கண்டிப் பகுதி உழவர்களிடம் தானியவரி, நிலவரி போன்ற சுமைகளை அதிகப்படுத்தி அவர்களை நிலங்களை விட்டு வெளியேறும் படிச் செய்தது, மேலும் தரிசு நிலச் சட்டம்' இயற்றி சட்ட பூர்வமான உரிமை கொண்டாட முடியாத நிலங்களை அரசு நிலமாக அறிவித்தது.

3 பிறகு அந்த நிலங்கள் அங்கிருந்த பிரிட்டிஷ் குடிகளுக்கு மிகவும் சொற்பமான விலைக்கு விற்கப்பட்டன. நிலங்களை வாங்கியவர்கள் இலங்

## சில குறிப்புகள்

கையின் மத்திய மலைப்பிரதேசங்களில் காபி தேயிலை தோட்டங்களை உருவாக்க முனைந்தார்கள். இலங்கை மக்கள் யாரும் அங்குவேலை செய்ய முன்வராத நிலையில் தென்னிந்திய கிராமங்களிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் மக்கள் கூலிகளாக அழைத்து வரப்பட்டனர்.

4 ஆரம்பத்தில் குடியேற்றப்பட்ட கூலிகள் கொஞ்சகாலம் வேலை செய்வதும் தங்கள் நாட்டுக்கு மீண்டும் திருப்பிச் செல்வதுமாக இருந்தனர். காப்பித் தோட்டங்களில் செடிகளில் நோய் பரவி நாசமானதும், முதலாளிகள் தேயிலைத் தோட்டங்களை உருவாக்க முனைந்தனர் இவைகளுக்கு அநேக நிரந்தரக் கூலிகள் தேவைப்பட்டனர். இவ்விதமாக 1870 வாக்கில் நிரந்தரமாக இலங்கையில் குடியேறும் கூலிகளின் எண்ணிக்கைகூடியது, 1948ல் இலங்கை சுதந்திரம் பெற்ற சமயம் 1 மில்லியன் மக்கள் நிரந்தரக்குடிகளாக மாறியிருந்தார்கள்.

5 இலங்கை தோட்ட முதலாளிகளின் ஏஜெண்டுகள் மூலம் தென்னிந்தியாவிலிருந்து இவ்வளவு தொழிலாளர்களைக் கொண்டு வந்து குடியேற்றிய போது, இலங்கையோ, இந்தியாவோ சுதந்திரநாடாகஇல்லை இவ்விரு பூகோளப் பகுதிகளுமே பிரிட்டனை தலைமையாகக் கொண்ட காலனி நிர்வாகத்தின் கீழ் இருந்தன.

6 1948ல் ராஜ்ய உரிமை அந்தஸ்து கிடைத்த சமயத்தில் இந்த தோட்டத் தொழிலாளரில் பெரும்பான்மையோர் 95 | ) தங்களது கிராமங்களில் மூதாதையர்களின் அனைத்து தொடர்புகளையும் இழந்திருந்தனர். நிறைய பேர் இலங்கையில் பிறந்தவர்களாகவும் இந்தியாவுடன் சிறிது உறவுடனோ அல்லது உறவற்றோ இருந்தனர் ஜெர்மன் குடியரசில் 15 ஆண்டுகளுக்கு முன் குடியேறிய துருக்கியர்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டபோது, அந்த மக்களை தனது பிரஜைகளாக ஏற்க மறுத்து ஜெர்மன் பிரஜைகளாக அவர்களை மாற்ற துருக்கிவற்புறுத்தியதை இதற்கு இணையாகச்சொல்வது சம்பந்த மில்லாதது என்ற முன்னைய இலங்கை நீதியமைச்சரின் கூற்று பொருத்தமற்றதும் நடைமுறைக்கு உதவாததும் ஆகும்.

ஏனெனில்,

(அ) தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையானவர்கள் இலங்கையில் பிறந்தவர்கள். அவர்களுக்கு இந்தியாவில் உறவுகள் ஏதுமில்லை.

(ஆ) இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் ஜெர்மன் துருக்கியைப்போல ஒருநாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு குடியேறியவர்கள் அல்லர். ஆனால் இரண்டு பிரதேசங்களையும் (இலங்கை, இந்தியா) ஒருங்கே ஆண்டு வந்த காலனிய எஜமானர்களால் கொண்டு வரப்பட்டவர்கள்.

(இ) ஒரு நாட்டில் பாரம்பரியமாக வசிக்கும் மக்களுக்கு அந்த நாட்டு பிரஜையாக உரிமை உண்டு என்பதும் அவர்கள் அந்நாட்டின் குடிமக்களாகவே நடத்தப்பட வேண்டும் என்பதும் 1919ல் ஏற்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களின் தொடக்கமான பாரீஸ் சமாதான உடன்படிக்கையில் ஓர் முக்கிய அம்சம்.

(ஈ) சர்வதேச 'மனித உரிமைபிரகடன'த்தில் கையெழுத்திட்டுள்ள இலங்கை, குழந்தைகள் ஆண்டை டம்பமாகக் கொண்டாடியது. சர்வதேச உடன்படிக்கைகளின் படி எல்லாக் குழந்தைகளும் கட்டாய பிரஜா உரிமையும் ஒரு குழந்தை எந்த நாட்டில் பிறந்தாலும் அதன் பெற்றோர் வசிக்கும் நாட்டில் பிரஜா உரிமை பெறவும் உரிமை உண்டு.

7 சுதந்திரம் வழங்கப்படுவதற்கு முன்பாக 1947ல் இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்களும் சட்ட பூர்வமாக வோட்டளிக்க அனுமதிக்கப் பட்டார்கள்.

8 காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் தகுதிபெற்ற சுய உரிமையுடைய இலங்கையின் சோல்பெரி அரசியல் அமைப்பு விதிகளின்படி எந்த இனத்தைச் சேர்ந்த மக்களும் பிரிதொரு இனமக்களை சிறுமைப்படுத்துவதோ அவர்களின் மீது பிரத்யேகமான தடைகள் எதனையும் விதிப்பதோ கூடாது

9 வேறு நாடுகளிலிருந்து உகாண்டாவிற்கும் மலேயாவிற்கும் கொண்டு வரப்பட்டவர்களுக்கு பிரிட்டிஷ் பிரஜா உரிமை அளிக்கப்பட்டது. இந்திய சுதந்திரமும் அதன் பிந்தைய நிகழ்ச்சிகளும் பிரிட்டிஷாருக்கு வெறுப்பைத் தந்த

## உப்பாலி

தின் காரணமாக இந்தியாவிலிருந்து அவர்களால் இலங்கைக்கு கொண்டுசெல்லப்பட்டவர்களுக்கு குடியுரிமைப் பாதுகாப்பும் பிரஜா உரிமைகளும் உத்ரவாதம் செய்யப்படவில்லை.

10 பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் சட்டபூர்வமான ஒப்பந்தங்களின் பேரில் அழைத்துவரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர் தம் வம்சாவழியினருக்கும் சட்டபூர்வமான, நியாயமாக செய்ய வேண்டிய கடமைகளைப் பொறுத்தவரை பிரிட்டிஷார் பொறுப்பின்றி இருந்தனர்.

11. 1948-ல் தோட்டத் தொழிலாளர்கள் பிரஜைகளாக பதிவு செய்து கொள்ளலாம் என்று "பிரஜா உரிமைச் சட்டம்" இலங்கை அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. பிரஜா

உரி
செய்
கும்
தாக
ருக்க
ரது
வசிக்
பதார
தால்
தாத்
தவர
இந்த
களுக்
கப்ப
தோ
இது
விகு
தால்
விண்
இய
குறிப்
(இன
டப்ப
இலங்
சட்ட
இந்த
இதி
அமை
பாற்

பிரிவ்
விட்ட

19
படை
இந்த்
பிரஜ
பதிவ
பெற
குரின
பிரிட்
அவ
பாது
இதகு
லட்ச
அறி

19
பிரச்
பிரத
நாய
சாஸ்
பட்ட
5,25
திருப்
இலங்

டரிமைபெற விண்ணப்பம் செய்பவர்கள் விண்ணப்பிக்கும் தேதிக்கும் முன்னராக இலங்கையில் பிறந்திருக்க வேண்டும் மேலும் அவரது தந்தையும் இலங்கையில் வசிக்க வேண்டும். விண்ணப்பதாரரர் வெளியில் பிறந்திருந்தால் அவர்களது தந்தையும் பாத்தாவும் இலங்கையில்பிறந்தவராக இருக்க வேண்டும். இந்த கருரான விதிகள் தமிழர்களுக்கு மட்டுமே கடை பிடிக்கப்பட்டன. படிப்பறிவில்லாத தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுபற்றிய விவரங்களும் உதவிகளும் சரிவரக் கிடைக்காததால் பெரும்பான்மையோர் விண்ணப்பம் செய்து கொள்ள இயலாதிருந்தனர். எந்த ஒரு குறிப்பிட்ட சமுகத்திற்கும் (இனத்துக்கும்)பாரபட்சம்காட்டப்படுவதைத் தடுக்கும் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது இந்த 'பிரஜா உரிமைச்சட்டம்' இதில் தலையிட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றுவதற்கு நீதி மன்றமும்

---

ி துரே

---

பிரிவிகௌன்சிலும் கூட தவறி விட்டன.

12. துவேஷத்தின் அடிப்படையில் 1948ல் பிறந்த இந்தியா — பாகிஸ்தானிகள் பிரஜா உரிமை சட்டத்தின்படி பதிவு செய்து பிரஜா உரிமை பெறத் தவறியவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது இதில் பிரிட்டிஷ் அரசும் தலையிட்டு அவர்களின் உரிமையைப் பாதுகாக்க முன் வரவில்லை. இதனால் கிட்டதட்ட 10 லட்சம் பேர் நாடற்றவர்களாக அறிவிக்கப்பட்டனர்.

18 1964ல் நாடற்றவர்கள் பிரச்சனை தொர்பாக இலங்கை பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயகாவும் இந்திய பிரதமர் சாஸ்திரிக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் படி 5,25,000பேர் இந்தியாவுக்கு திரும்பவும் 3,00,000 பேர் இலங்கை பிரஜா உரிமைபெறவும் ஏற்பாடானது.மீதமுள்ள 1,50,000பேர்களை சரிபாதியாக இலங்கையும் இந்தியாவும் ஏற்றுக்கொள்வதெனவும் பின்பு முடிவானது.இந்த ஒப்பந்தம் 1979 அக்டோபர் 30 க்குள் அமுல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

14. இந்த மோசமான உடன் படிக்கை பற்றி சம்பந்தப்பட்ட மக்களிடம் இந்திய அரசோ, இலங்கை அரசோ முன் கூட்டியே அபிப்ராயம் கோரவில்லை. இந்த ஒப்பந்தமானது இலங்கை கையெழுத்திட்டுள்ள ஐ நா உறுதிமொழிக்கும் சர்வதேச சட்டத்திற்கும் முரணானது. இந்தியாவும் இலங்கையும் இந்த சர்வதேச சட்டத்திற்கு விரோதமான ஒப்பந்தத்தை அமுல் படுத்திய தன்மூலம் ஐ.நா. சாஸனத்தை இழிவு செய்திருக்கின்றன.

15. இந்த ஒப்பந்தம் தற்போது காலாவதியாகிவிட்டது இனிமேல் இருநாடுகளையும் இது கட்டுப்படுத்தாது. இந்த ஒப்பந்தம் முழுமையான அளவில் செயல்படவும் இல்லை. இதற்கிடையில் தோட்டத் தொழிலாளாரின் மக்கள் தொகை உயர்ந்து நாடற்றவர்களின் எண்ணிக்கையும் ஆதிகரித்துள்ளது. 9லட்சம் பேர் இந்தியா அனுப்பப்பட்ட போதிலும் தற்போது 9லட்சம் பேர் நாடற்றவர்களாகியுள்ளனர் இந்த ஒப்பந்தத்தின் நெறியற்ற தன்மையை மிகவும் காலம் கடந்து இந்திய அரசு உணரத் தொடங்கியிருக்கிறது

16. இப்படியாக தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சனை இன்னும் தீர்வு காணப்படாமலேயே உள்ளது பிரிட்டிஷ் இலங்கை அரசாங்கங்கள் இவர்களுடன் தோட்டத் தொழிலாளருடன்) முற்றிலும் ஜனநாயக ரீதியிலான ஆலோசனை நடத்துவதன் மூலம் இதனைத் தீர்க்க முடியும் இப்போதும்கூட இவர்கள் இலங்கை அல்லது பிரிட்டிஷ் பிரஜா உரிமை கோர சட்ட பூர்வமான உரிமை உடையவர்கள் தான்.

நன்றி :

ஸ்ரீலங்கா இன்பர்மேஷன் புளட்டின்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஆதவனின் காவல் படி மேற்படி நகரப்புறத்தைச் சகர்ந்த 27 தோட்டங்களில் மட்டும் 82 லயங்கள் (தொழிலாளர் குடியிருப்புகள்) தீக்கிரையக்கப்பட்டன; 27 லயங்கள் என்று சொல்லும் போது ஒருலயத்தில் சுமார் 16வீடுகள் (கம்பரகள்) இருக்கும் ஆக 1812 வீடுகளாகும் இவற்றுள்ள 4 லயங்கள் கொள்ளையடிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. மேலும் 4 லயன்கள் கொள்ளை மட்டும் அடிக்கப்பட்டன. 1 உத்தியோகத்தவர் வீடு தீ வைக்கப்பட்டது;

உத்தியோகத்தவர்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்டது. பதுளைப்பகுதியிலுள்ள லெஜர் வத்தையில் ஏற்பட்ட பாதிப்புகள் அறிய முடியவில்லை.

தோட்டங்களில் நடந்த கொலைகள் பற்றி விவரம் சரியாக அறிந்துக் கொள்ள முடியவில்லை. கலவரத்தின் போது கொழும்பிலிருந்து மலையகம் நோக்கி சென்ற மலையகத் தமிழ் இளைஞர்கள் உத்தியோகத்தவர்கள் பல பயணம் செய்த போதே கொல்லப்பட்டார்கள் வீடுகளில், பஸ்வண்டிகளில் வாகனங்களில், ரயில்களில் என்று கண்ட இடங்களிலெல்லாம் தமிழ் மக்கள் வெட்டிக்குத்தி கொலை செய்யப்பட்டார்கள்— தீயிட்டு கெலுத்தப்பட்டரர்கள்.

இந்த கலவரத்தில் கொலைகள் கிட்டத்தட்ட 4000க்கு மேல் என்று மலையகப்பகுதியிலிருந்து வந்த ஒரு பிரமுகர் தெரிவித்தார்.

---

# சுடரும் கண்கள்

**அ. ஜோதிவர்மன்**

என் தேசத்தின்
வசந்தத்திற்கான
பேரின்ப முழக்கத்தை,
அவர்கள்
அடக்க முயல்கிறார்கள்

O

சுதந்திர ஈழத்தை
பார்க்க முயன்ற
அபிலாசைக்காக,
என் தோழர்களின்
கண்களையே
தோண்டி எடுத்து,
பூட்ஸ் காலால்
நசுக்கி விட்டார்கள்

O

இன்னும் சில இடைவெளிகளில்,
சிங்கள இனவெறியர்களின்
முட்டுப் பிடியிலிருக்கும்
துப்பாக்கிகள்
எங்கள் கைகளுக்கு
மாறலாம்...

O

அந்த நம்பிக்கையே
போதும்...
இழந்து போன
தோழர்களின் கண்கள்,
சுதந்திர ஈழத்தில்
சுடர் விடும்
நட்சத்திரங்களாகும்.

# சிறைப் படுகொலைகள்

## புத்த பகவான் காலடியில் இரத்த ஆறு ஓடியது

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திட்டமிட்டபடி அவர்கள் குறிப்பிட்ட சிறைக்கைதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சாராயம், கசிப்பு போன்ற மது வகைகளைக் கொடுத்து உற்சாகப்படுத்தி கொலை வெறியை ஆரம்பித்தார்கள். அந்த நேரத்தில் சிறைசாலையின் உயர் அதிகாரிகள், மதிய உணவுக்காகத் தத்தமது வீடுகளுக்குச் சென்று விட்டிருந்தார்கள். சரியான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்தக் கொலை வெறியர்கள் தங்கள் வெறியாட்டத்தை ஆரம்பித்தார்கள் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு பதினைந்து நிமிடங்கள் பிந்தி சுமார் 2 30 மணி. பிற்பகல். பெரும் கொலை வெறிக் கூச்சல் எழுப்பிக் கொண்டு ஆயுதபாணிகளாக படை எடுத்துச் சப்பல் சிறைக் கூடத்தை நோக்கி ஓடினார்கள். அங்கேதான் தமிழ் அரசியல் கைதிகள் வைக்கப்பட்டிருந்தார்கள்.

சிங்கள மன்னன் துட்டகைமுனுவின் பரம்பரையில் வழித் தோன்றல்களான இந்த வீராதி வீரச் சிங்கங்களுக்குத் தமிழ் அரசியல் கைதிகள் இருந்த சிறைக்கூடத்தின் கதவுகள் ஏற்கனவே அவர்களின் வரவுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. பின்பு கேட்கவும் வேண்டுமா! பூட்டப்பட்டிருக்கும் அறைக் கதவுகள் திறக்கப்பட்டன. கத்திகள் வாள்கள் கோடரிகள் இரும்புக் கம்பிகள் பொல்லுகள் குத்தூசிகள் விறகுக்கட்டைகள் விளையாடத் தொடங்கின. ஆம்! தமிழ் இளைஞர்களின் செங்குருதி சிலுவைக் கட்டிடத்திற்குள் ஆறாக ஓடியது தலைகள் பிளக்கப்பட்டன. கண்கள் தோண்டப்பட்டன. இதயங்கள் கிழிக்கப்பட்டன. குடல்கள் உருவப்பட்டன் குரல்வளைகள் அறுக்கப்பட்டன. கை, கால்கள் துண்டிக்கப்பட்டன. இவ்வளவு கொடூரச் சித்திரவதைச் செயல்களும் சிறைக் காவலர்களுக்கு முன்னிலையிலேயே நடைபெற்றது. இதில் வேடிக்கை என்னவென்றால், சிங்கள சிறைக் கைதிகள் தமிழ் அரசியல் கைதிகளைக் கொல்கிறார்கள் அதைச் சிங்கள இன வெறி பிடித்த காவலர்கள் ரசித்துச் சிரிக்கிறார்கள் தமிழர்களின் மரண ஓலங்கள் சிங்களவர்களின் தேனினும் இனிய கானங்கள் எப்படி இருக்கிறது சிங்கள இனவெறியர்களின் தமிழ் இனவெறித் துவேஷம் இந்தக் கொலை வெறிக் கூச்சலையும் குழப்பத்தையும் கட்டுப்படுத்த சிறைச்சாலைக்கு வெளியே காவலுக்கு நின்ற ஆயுதப்படையினர் உள்ளே அழைக்கப்பட்டார்கள். இது ஒரு கண் துடைப்பு வேலை என்பது ஆயுதப்படையினர் சிறைக்கைதிகளுக்கு இன்னும் கொலை வெறிக்கு உற்சாகமூட்டினார்கள். ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கியால் வேட்டுகளை தீர்த்து சிறைக்கைதிகளை நோக்கிக் கைகளை அசைத்துத் தமது தார்மீக ஆதரவை மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

இந்த நேரத்தில்தான் கொலைவெறியின் உச்சகட்டமே செல்கின்றது. குட்டிமணி, ஜெகன் மரண தண்டனை பெறப்பட்ட நேரத்தில் அவர்கள் இருவரும் தங்களது இரு கண்களைக் கண் தெரியாத அந்தகர்களுக்கு அளித்து அவர்கள் மூலம் மலரப்போகும் தமிழீழத்தைப் பார்க்க வேண்டும் என்ற உருக்கமான பொருள் நிறைந்த விருப்பத்தை நீதி மன்றத்தில் தெரிவித்த காரணத்திற்காக– குட்டிமணி குற்றுயிராக வெளியே இழுத்து வரப்பட்டு – சிறைச்சாலையின் மத்தியில் போடப்பட்டு. 'இவர்தான் குட்டுமணி' என்று சொல்லி விசில் அடித்து-ஆரப்பரித்து -'ஜெயவேவா' என்று கோஷம் போட்டு அவர் இரு கண்களும் ஒரு கூரிய ஆயுதத்தால் தோண்டி எடுக்கப்பட்டன. கண்கள் தோண்டி எடுக்கப்பட்டதும், மற்ற சக சிங்கள கைதிகள் கை தட்டி விசில் அடித்து வெறி உணர்ச்சி பொங்க அந்தக் கண் தோண்டிய கைதியை உயரத் தங்களின் கைகளில் தூக்கி ஆர்ப்பரித்தார்கள். மற்ற கைதிகள் குட்டிமணி உடலை மேலும் குத்தி– கிழித்து அவரின் ஆண் உறுப்பையும் வெட்டினார்கள். இறுதியாகச் சிறைச்சாலையின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த புத்தவிகாரையின் புத்தச்சிலையின் முன்னல் குட்டிமணியைப் போட்டார்கள். என்னே! சிங்கள பௌத்த இனவெறியின் கொடூரம் ?! இவ்வாருகவே ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டன அவரின் ஆண் உறுப்பும் வெட்டிப் போடப்பட்டது. அவரும் புத்தரின் காலடியில், குட்டிமணியிடம் இரத்த வெள்ளத்தில் போடப்பட்டார். இப்படியாக இப் படுகொலையின் தொடர்கதை சிங்களக் கைதிகளின் காட்டுமிராண்டித்தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஒவ்வொரு தமிழ் இளைஞனும் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டு, புத்தரின் காலடியில் போடப்பட்டார்கள். புத்தரின் காணிக்கைப் பொருட்களாக தமிழ் இளைஞர்களின் தலைகள் கண்கள் உடல்கள் கால் கைகள் செங்குருதியாவும் அன்று சிங்களவர்களால் காணிக்கையாக அளிக்கப்பட்டன.


இந்தக் கொலைவெறியின் ஒரு திருப்பு முனையாக மனதை உருக வைத்த சம்பவம் சிறுவன் மயில்வாகனத்தின் மரணம் பொன்னாலைப் பாலத்தில் கடல்படையினரின் (நீர் இழுக்கும் வாகனத்திற்கு ('பௌசர்') வெடிகுண்டு வைத்ததாகக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தான் இச்சிறுவன். ஒரு கைதியால் ஒரு மறைவான இடத்தில் இச்சிறுவன் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை கண்ணுற்ற ஜெயிலர் சமிதரத்ன அச்சிறுவனை தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கத்தியால் அவனின் குரல் வளையை வெட்டினான். ஆம் சிரச்சேதம் செய்து வீசப்பட்டான் அச்சிறுவன் பெற்றதாய் கண்டிருக்க வேண்டும். இக் கொடூரக் காட்சியை' கதறித் துடித்துச் செத்திருப்பாள். இந்த வீரத் தமிழ்ச் சிறுவனின் மரணம் எமது இனத்தின் சோக வரலாற்றில் மறக்க முடியாத சம்பவம். சிங்களவர்கள் காட்டுமிராண்டி இனம் என்பதற்கு இச்சிறுவனின் மரணமே ஒரு சான்றாகும் சிறுவனைப் படுகொலை செய்த ஜெயிலர் சமிதரத்ன ஒரு படித்தவன் பட்டதாரி, படித்தவர்களே இன்று இனப் படுகொலைகள் செய்வது சிறீலங்காவில் சாதாரணமாகி விட்டது.

அன்றையப் படுகொலையின் 35 தமிழ் இளைஞர்கள் பலியானார்கள் சிறைச்சாலை வாகனத்தில் அவர்களின் உடல்கள் முழுநிர்வாணமாகப் போடப்பட்டது. அந்த உடல்களின் மத்தியில் ஒரு சிலரின் இறுதியான உயிர்ப்பிரிவின் முனகல் ஒலி கேட்ட போது அந்த நிலையிலும் பொல்லால் அடித்துக் கம்பியால் குத்தி அந்த ஒலியை நிரந்தரமாகவே நிறுத்தினார்கள், இரத்தமே அற்ற கொலைவெறியர்கள். ()

---

## சிறிலங்கா வெலிக்கடை படுகொலைக்கு தப்பிய ஒரு கைதியின் அனுபவம்

# 5



சபினுவின் அந்த உபசரிப்புகள் எல்லாம் நினைவுத்திரையில் வந்து விழுகிறபோது, இன்னும் எத்தனையோ சம்பவங்கள் சங்கிலி கோவையாகத் தொடர்ந்து வந்துக் கொண்டிருந்தன அவற்றில் மரியதாஸும், சோமபாலாவும், மணியும், காளிமுத்தும்... இன்னும் அந்த நினைவுகளில்—கடந்தகால வாழ்க்கையில் எனது சுகதுக்கங்களில் பங்கு கொண்ட அத்தனை பேரும்

மனதைக் கலங்க வைத்தார்கள்.

ஏதோ ஒரு கிறிஸ்மஸ் அன்று நான் காலையிலேயே வெளியே போய் விட்டேன். இரவு ஒன்பதோ பத்தோ மணிக்குத்தான் திரும்பினேன்.

நான் எங்கள் வீட்டுக்கதவைத் தட்ட ஆரம்பித்திருப்பேன். மரியதாஸ் அவன் வீட்டுக்கதவைத் திறந்துக் கொண்டு வெளியே வந்தான். அவனது வீடு பக்கத்து வீடு தான்; வலதுபக்கம்; சபீனு வீடோ இடதுபக்கம்.

'என்னடா மச்சான் சங்கர் உன்புததிய காம்ச்சட்டியே''

—வெளியே வந்ததுமே பாய்ந்தான்.

அவன் எதுக்காக ஆத்திரப்படுகிறான் என்று எனக்கு தெரியும தெரிந்தும் தெரியாத மாதிரி கேட்டேன்;

'ஏன் என்ன மச்சான்?''

''ஏன் என்னுவா? என்னடா நேத்து நான் சொன்னதை மறந்திட்டுயா? இன்னைக்கு கிறிஸ்மஸ் எங்கேயும் போயிடாதேனு சொன்னேனில்லை' என்று கேட்டான்

''ஆமாடா என்னடா பண்ணுறது அவசரமாக ஒரு காரியமா வெளிய போயிட்டுவந்துடலாமுனு போனேன் முடியல்ல'' என்று சமாளித்தேன்.

''ஆமாம் பெரிய வெட்டி முறிக்கிற வேலைசெய்யபோன? என்று பேச்சை முறித்துக்' கொண்டு போய் கதவைச் சாத்திக் கொண்டான்

அதற்கு பின் நான்கைந்து நாட்கள் சென்று—புது வருடப் பிறப்புக்கு முதல் நாள்—

''சங்கர் நாளைக்கு நியூ இயர். அன்னைக்கு மாதிரி ஓடிடாதே'' என்று எச்சரித்தான்.

மறு நாள் எங்கும்போகவில்லை. அவன் வீட்டிலே தான். நான் மட்டுமல்ல: சோமபால, மணி, காளிமுத்து எல்லோருமே...

புத்தாண்டு கொண்டாட்டம் தான்.

மரியத ஸ், போலவேஅவன் அப்பாவும் 'சேஷியல் தான் வீட்டில் எல்லோருக்குமே அந்த குணம் இருந்தது

நாங்கள் இருந்த அந்த 'லயத்' தில் பத்து 'காம்பராக்கள். அந்த பத்து வீடுகளில் மரியதாஸ் வீட்டின் நடை உடை, பாவனையில் வித்தியாசமானதாகவே இருப்பார்கள்.

அவர்கள் அரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள், ஆனால் அவர்கள் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்ததால், அவர்கள் அரிஜனர்கள் என்று சொல்வதற்கு அவசியமில்லாது போய்விட்டது. அவர்கள் அந்த வகுப்பை சேர்ந்தவர்கள் தான் என்று அவர்களை பார்க்கும் யாரும் நம்பமாட்டார்கள் அதற்கு ஏற்ற மாதிரி அந்த வகுப்பைச் [illegible] முழுக்க மாறுபட்டவர்களாக இருந் ார்கள்

சின்ன வயதில் நான் அவர்களுடைய வீட்டுக்கு போகிற போதெல்லாம் அவர்களுடைய வீட்டை பார்க்க எனக்கு விநோதமாகவும், புதுமையாகவும் இருக்கும்.

மற்ற வீடுகளின் பார்க்க முடியாத பொருள்கள் மரியதாஸ் வீட்டில் இருந்தன கட்டில், மேசை, நாற்காலி, கண்ணாடி வைத்த அலுமாரி பெரிய பெரிய போட்டோகள் மான்கொம்பு எங்கர்... எல்லாவற்றிலுமே சித்திரம் செதுக்கிய வேலைப்பாடுகள்.

''இந்த சாமான்களெல்லாம் எப்பிடிடா உங்களுக்கு கெடச்சுது செஞ்சிங்களா? வாங்குனிங்களா?' என்று அவனிடம் நான் கேட்பதுண்டு

'அந்த துரை கொடுத்தது இந்ததுரைசாணி கொடுத்தது' என்று அவன் சொல்வான்.

அவனுடைய அப்பா வெள்ளைக்காரத்துரைகளிடம் 'அப்பு' வாக வேலை செய்துவந்தார். தோட்டத்தில் மனேஜராக, சுப்பிரிண்டண்டாக இருந்த இந்த துரைகள் சீமைக்கு போகும்போதெல்லாம் இப்படி இவருக்கு எதையாவது 'பிரசண்ட்' செய்துவிட்டு போவார்கள்.

அந்த 'பிரசண்டேசன்' கள் அந்த சின்னச்சிறு 'காம்பரா'வை அடைத்து கிடக்கும் அடைத்துக்கிடந்தாலும் எல்லாவற்றையும் அழகாகவே வைத்திருந்தார்கள்.

அப்போதெல்லாம் ச்சே... இப்படி எல்லாம் நம்ம வீட்டில் இல்லையே என்ற ஏக்கம் எனக்கு தோன்றும்.

வெளியே செல்லும்போதும் அப்படி தான் நாகரீகமாக உடுத்திக்கொண்டு போவார்கள் அதில் 'துரைமார்' பாணி இருக்கும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், விசேஷ நாட்களிலும் தவறாது சர்ச்சுக்கு போவார்கள்; ஏதாவது சமய நிகழ்ச்சிகள் என்றாலும் தவற மாட்டார்கள்.

எனக்கு ஒன்பது பத்து வயதிருக்கும் போது மரியதாஸ் என்னையும் சர்ச்சுக்கு கூப்பிடுவான் தொடர்ந்து கொஞ்ச காலம் நானும் போனதுண்டு.

வெள்ளைக்காரர்கள், பறங்கிகள் என்று எல்லா இனத்தவர்களும் சர்ச்சிக்கு வருவார்கள்; பெரிய பெரிய பதவிகளில், வேலைகளில் இருப்பவர்கள். அவர்களுடைய தோற்றம் மிடுக்கு எனக்கு அச்சமாக கூட இருக்கும்.

'அவர்கள் மாதிரி நம்மளும் வரமாட்டோமோ' என்ற ஏக்கம் நெஞ்சை அரிக்கும்.

அங்கே எப்படி நடந்து கொள்வது என்றெல்லாம் மரி

(10-ம் பக்கம் பார்க்க)

# பொறிகள் ...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யதாஸ் அவனுக்கு தெரிந்த வகையில் சொல்வான் நானும் அவன் சொல்கிற மாதிரி எல்லாம் செய்வேன்.

சர்ச்சிக்கு போய் திரும்பும் போது ஒரு 'சிஸ்டர்' வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போவான் அங்கே இரண்டு மூன்று சிஸ்டர்கள் இருப்பார்கள் தேவசேவை செய்து வந்தார்கள்.

ஞாயிற்றுகிழமைகளில் குழந்தைகளுக்கு வேதம்சொல்லிக்கொடுப்பார்கள் தோத்திரப் பாட்டு பாடுவார்கள்; ஜெயம் சொல்வார்கள் ஏசு, மேரிமாதா போட்ட சின்ன சின்ன படங்களெல்லாம் கொடுப்பார்கள்

என்னையும் அவர்களில் ஒருவராக கருதினார்கள் மற்றவர்களை போல என்னையும சத்தம் போட்டு பிரர்த்தனை செய்யச் சொல்வார்கள். நான் திணறிப் போவதுண்டு.

முடிந்து வரும் போது, மரியதாஸ் அவற்றைப்பற்றிசொல்வான்

'அப்படி சொல்லப்படாது; இப்படிதான் சொல்லணும்' என்று சொல்வான்.

'போடா பயமா இருந்துது ஏதும் பிழையா போயிடுமோனு' என்று நான் பதிலுக்கு சொல்வேன்.

அவன் வீட்டுக்கு அடிக்கடி சாமியார்மார்கள், சிஸ்டர்மார்கள் வருவார்கள் ஜெபம் சொல்ல

அப்பொழுதெல்லாம் எல்லோருக்கும் பிஸ்கட், கேக்-வைத்து உபசரிப்பார்கள் அழகான டிஸ்களில் 'டிரே'யில் வைத்து பரிமாறுவார்கள், 'கப் பன் அன் சாசரில்' தேனீர் வழங்குவார்கள்.

இதையெல்லாம் பார்க்க அப்போது எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது

இன்னும் கூட நாங்கள் இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன் மரியதாஸ் எங்களோடு கொண்டாடிய அந்த கடைசி கிறிஸ்மஸ் என் நினைவில் அப்படியே இருந்தது.

"சங்கர் ரெண்டு மூனு மாதத்துல இந்தியா போகப் போற அதுக்கு பெறகு எப்ப பார்க்க போறோமோ இன்னைக்கு இந்த கிறிஸ்மஸ்ஸ நல்லா கொண்டாடனும். ஒவ்வொரு கிறிஸ்மஸ்லயும் நினைச்சிக்கனும்" என்று அவன் சொல்லிச் சொல்லி உபசரித்தது என் நெஞ்சையே அடைத்தது

அன்றைக்கு எங்கள் குடும்பம் இந்தியா போவதைப் பற்றிய பேச்சுத்தான்—

"சரிடா ஒன் ஆளு எல்லாம் எப்ப இந்தியா வரப்போகுது? போனதும் என்ன ஆள மறந்திடுவியா?"

அந்த பேச்சில் சபீனாவைப் பற்றியும் மணி பூட்பகமாக கேட்டான்.

"தெரியல்ல அவங்களுக்கு இன்னும் பாஸ்போர்ட் கிடைக்கல்ல; அவங்க அப்பாபேசுறத பாத்தா இன்னும் ரெண்டு மூனு வருசம் போகும்போல இருக்குது அதுக்கிடையில..." என்று நான் எதுவும் சொல்லாமலே உதட்டை பிதுக்கினேன்.

நான் இந்தியா போன பின் அவளை சந்திக்கப் போறேனே இல்லை. அதற்கு இடையில் அவளுக்கு கல்யாணம் ஏதும் முடிந்து விட்டால்...'— அப்போது மனசுக்குள் நினைத்துக் கொண்டேன்

"மச்சான் எப்ப இந்தியா புறப்படுறீங்க" என்று சோம்பால கேட்டான்.

அதிகமாக இரண்டு மாதத்தில் புறப்பட்டுவிடுவோம் என்று சொன்னேன்.

"அங்கிட்டு ஒரு மாசம் தானே மச்சான் அவுருது முடிந்து போங்க மச்சான்' – அவனுக்கு என்னைபிரிய மனம் இல்லை.

அவனுக்கு ஆதரவாக காளிமுத்துவும், 'ஆமா சித்திரைல இந்த வருடம் சாமி கும்புடுறதா தோட்டத்தில் பேசிக்கிருங்க கடைசியா அதையும் தான் பார்த்துட்டு போயிடுங்களேன்" என்று அபிப்பிராயத்தைச்சொன்னான்

'நான் பிரிந்து போவதில் தான் இவர்களுக்கு எத்தனை ஆதங்கம். அப்பொழுது மனம் நெகிழ்ந்தது.

எனக்காகவே மரியதாஸ் அந்த கிறிஸ்மஸ்ஸில் தடபுடலாக ஏற்பாடுகள் செய்திருந்தான்.

என்னென்னவோ வீட்டில் தயாரித்திருந்தார்கள் அவனுடைய அப்பா துரை பங்களாவில் வேலை செய்ததால் அங்கிருந்தே விதவிதமாக கேக் தயாரித்து கொண்டு வந்திருந்தார்; அந்த பண்டிகைக்கேயுரியது போன்ற திராட்சை, ஆப்பிள் பழ வர்க்கங்கள் வாங்கி வந்திருந்தர்கள் இன்னும். பீயர் பாட்டில்கள் கூட மரியதாஸ் கொண்டுவந்திருந்தான்.

அந்த கிறிஸ்மஸ் மறக்கப் முடியாத பண்டிகை தான்

O

அது முடிந்து சில மாதங்கள் கழிந்தன.

அடுத்து தமிழ் சிங்கள புத்தாண்டு வந்தது.

காலையிலேயே வந்த சோமபால என்னை அவன் வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போனான்.

"எண்ட புத்தா" என்று அவனுடைய பாட்டி என்னை வரவேற்று விட்டு, "சோமா, தவால் கேமட்ட சங்கர் கெதர ஒக்கோம எச்சகத்கரகண எண்ட ஒனே; இராமசாமிட்டத் கியாண்ட சின்னம்மா ஏயா என்னனே ..." என்று அன்றை பகல் சாப்பாட்டுக்கு எங்கள் வீட்டில் எல்லோரையும் கூப்பிடவேண்டும் என்று சோமபாலாவிடம் சொன்னாள்; என் அப்பாவுக்கும் சொல்ல வேண்டும் என்றாள்; அம்மா வோ வரமாட்டாள் என்பதையும் சுட்டிக்காட்டினாள்,

சோமபாலவின் பாட்டிக்கு கிட்டதட்ட எழுபது வயதிருக்கும் பல்லுபோனாலும் திடமாக இருந்தாள் அவள் எல்லோரையுமே மகன் மகள் என்று தான் கூப்பிடுவாள் எல்லோருக்கும் அவள் ஆச்சி தான்

அன்றைக்கு அவள் வெள்ளை சீலை உடுத்தி ரொம்ப தூய்மையோடு இருந்தது இன்னும் கண்ணில் நிற்கிறது புத்தரை வணங்கும் பௌத்த மதத்தவர்கள் இப்படி புத்தாண்டு, போசன், வெசாக் மற்றும் போயா போன்ற நாட்களில் தூய்மையான வெள்ளை ஆடையில் 'பன்சலை' க்கு போவதை பார்க்காமல் இருக்க முடியாது

அன்றைய பகல் எல்லோருக்கும் அங்குதான் சாப்பாடு; அது அவர்கள் எங்களுக்கு வைத்த பிரிவுசாரமென்று கூட சொல்ல வேண்டும்.

நினைத்தாலும், இப்பவும் நாவெல்லாம் உரைக்கிறது— பால் சோறு, இடியப்பம், தேங்காய் சம்பல், காட்ட சம்பல், கொண்ட கெவும் என்று அவர்கள் சாப்பாடு பட்சணங்கள் தான் எத்தனை விதம்.

சாதி, சமயத்திற்கு ஏற்ற மாதிரி சாப்பாடு, பட்சணப் பண்டங்களில் கூட எத்தனை வித்தியாசம்'

—அப்போது நான் நினைத்துக் கொண்டதுண்டு.

தமிழர்களை விட அவர்கள் புத்தாண்டை விசேடமாக கொண்டாடுவார்கள் அந்த புத்தாண்டு மாதிரி இன்னும் நான் எந்த புத்தாண்டையும் சந்திக்கவில்லை

அந்த மறக்க முடியாத புத்தாண்டு முடிந்தது.

இனி தோட்டத்தில் சாமி கும்பிடு'மட்டும்தான் அதற்காக காத்திருந்தோம் அது முடிந்து விட்டால், அங்கே எங்களுக்கு எல்லாமே முடிந்து விட்ட மாதிரி தான்.

மூட்டையை கட்ட வேண்டியது தான் பாக்கி.

(தொடரும்)

# சென்ற விடமெல்லாம்

## அந்தமானிலிருந்து ஒரு கடிதம்

இலங்கையிலிருந்து திரும்பிய நாங்கள் 28.9.74 தேதியில் மண்டபம் தங்கலுக்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஏறத்தாழ ஒரு மாதம் தங்கியிருந்தோம். பிறகு 9.10.74 யில் கும்மிடிபூண்டி தங்கலுக்கு அழைத்து செல்லப்பட்டோம் அங்கிருந்து 16-12-74ல் அந்தமான் புறப்பட்டோம்.

நாங்கள் விட்டில் அந்தமானில் கேம்பில் 6மாதங்கள் காத்திருந்தோம். காரணம் எங்களுக்கு உடனடியாக நிலங்கள் உதவிகள் கிடைக்கவில்லை. 6வது மாதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது வீட்டுக்கு மண்யும் (வீடுகட்டிக்கொள்ள) 55 டின்களும் இரண்டு ஏர் மாடுகளும் பசுமாடு ஒன்றும் வழங்கப்பட்டது மேனி வெட்டுவதற்கு பணம் விதை நெல் கலப்பை முதலானவைகளும் கொடுக்கப்பட்டது.

வீடு கட்ட பணஉதவியும் கன்று வகைகள் மருந்து அடிக்கும் இயந்திரம் ஆகிய எல்லா உதவிகளும் கொடுத்தார்கள்.

எங்கள் நிலங்களில் எல்லா தானியங்களும் பழவகைகளும் விளைகின்றன. ஆனால் இவற்றைப் பாதுகாப்பது தான் எங்களுக்கு பெரும்பாடாக இருக்கிறது. காரணம் காட்டுப்பன்றிகள் வந்து அழித்து விட்டுப் போய் விடுகின்றன மனிதன் மேலே பன்றிகள் பாயும் அளவிற்கு அவற்றின் அட்டகாசம் தான் தாங்க முடியவில்லை.

அதிகாரிகள் இதைகவனிப்பதாய் இல்லை இந்த பிரச்சினை குறித்து அவர்கள் பார்ப்பதும் இல்லை; கேட்பதாயும் இல்லை.

இந்த பயிரினங்களை பாதுகாக்க வேலி போட வேண்டும் முள்கம்பி போட கடனுதவி கேட்டால் முன்பணம் கொடுத்தால் கடன் செலுத்துவோம் என்கிறார்கள் இது மாதிரி எந்த உதவியும் பெற முடியாமல் இருக்கிறது காரணம் எங்களிடம் பண வசதியில்லை.

இந்த பாதுகாப்பு இருந்தால் எங்களுக்கு எந்த குறையும் இல்லை; விவசாயத்திற்கும் வருமானத்திற்கு இந்த தீவு போல எதுவும் இல்லை என்று சொல்ல வேண்டும்

எங்களின் மிகப் பெரியகுறை இங்கு நாங்கள் 82 குடும்பங்கள் இருக்கின்றோம் பாக்கிஸ்தானிய செட்லர்கள் 700 குடும்பங்கள் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால்' எங்களின் எந்த கோரிக்கையும் எடுபடுவதில்லை, கேட்டால்கிடைப்பதில்லை, காரணங்கள் கூறி தட்டிக்கழித்து விடுகிறார்கள்,

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் எண்ணிக்கை இங்கு கூட வேண்டும் ஒரு ஆயிரம் குடும்பமாவது இங்கு வருவார்களேயானால் எங்கள் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பார்கள்; எங்கள் பிரச்சனை தீரும்.

இலங்கையை விட்டு தமிழ் நாட்டை விட்டு கடலுக்கப்பால் ரொம்ப தூரத்தில் இருக்கிறோம் என்ற உணர்வு ஆதரவின்மையும் எங்களிடமிருந்து அகலும். வேறு எந்த குறையும் இல்லை.

தமிழகத்தின் மறுவாழ்வு துறை இதைகவனிக்குமா?

-கே. பழனி

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

## கட்சிக்காரர் துணை போகிறார்கள்

சமூக நலனில் அக்கறை கொண்ட, இவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் கொண்ட அதிகாரிகள் போலிஸார் நடவடிக்கை எடுத்தால் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிப் பிரமுகர்கள் தலையிட்டு அந்த சமூக விரோதிகளை காப்பாற்றிவிடுகிறார்கள் என்று பாதிக்கப்பட்டவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்

இலங்கைத் தமிழர்களுக்காக கலங்குகிறவர்கள் கண்ணீர் வடிப்பவர்கள் இங்கு வந்து வாழ்க்கை தேடிக் கொண்டிருக்கிற மக்களை இன்னலுக்குள்ளாக்குவதும், சுரண்டி வாழ முயலுவதும் வேதனைக்குறியது.

## வசதியை பெருக்கிக் கொண்டார்கள்

இவர்களைச்சுரண்டி, இவர்களைக் கொள்ளையடித்து வாழும் பலர் இன்றைக்கு வசதிபடைத்த மனிதர்களாக உயர்ந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது வியாபாரிகள், கான்டிராக்டர்கள் போர்ட்டர்கள் என்று இவர்களை சுரண்டி வாழ்ந்து இன்றைக்கு உயர்ந்தவர்களில் பலர் சில வருடங்களுக்கு முன்னால் சாதாரண நிலையில் இருந்தவர்கள். இன்றைக்கு அவர்கள் பல வசதிகளோடு வாழ்கிறார்கள் என்றால் அது அகதிகளாக குடிப்பெயர்ந்து வரும் மக்களிடமிருந்து பறித்துக் கொண்ட வாழ்வாகும்.

இவர்களின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது இவர்களிடமிருந்து தப்ப முடிவதில்லை; குடிப்பெயர்ந்து வருகிறவர்களை கண்காணிக்க பாதுகாக்க அவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டும் கண்காணிப்பு அவர்களை காப்பாற்ற தவறி விட்டார்கள். போதிய பாதுகாப்போ, கண்காணிப்போ இல்லை.

-சஞ்சயன்

## இது ஒரு கேள்வி-பதில்

கே இலங்கை அகதிகளானஎமது மக்களை அந்தமான் தீவில்குடியமர்த்தினால் என்ன?

பதில் : இங்கே உள்ள கொய்வத் (இரப்பர்) தோட்டங்கள் முறையான வேலையாட்கள் இல்லாமல் வீணாகின்றன, எனவே இலங்கை அகதிகள் வரலாம். இது நடுவணரசு செய்யவேண்டிய பணி

நன்றி : அந்தமான் முரசு

## பண உதவி அதிகரிப்பு

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் வந்து முகாம்களில் தங்கியிருப்போருக்கான உதவித் தொகை ;அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மாதம் 90 ரூபா என அளிக்கப்பட்ட பண உதவி 357 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

துணிகள், போர்வைகள், பாத்திரங்கள் போன்றவற்றுக்கான உதவியும் 379 ரூபாயிலிருந்து 579 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மண்டபம் முகாமிலும் திருச்சி கொட்டப்பட்டியிலும் உள்ள முகாம்களில் தங்கியிருப்போர் இந்த உதவிகளைப் பெறுவர்.

Editor & Publisher : T S RAJU, 31, Gangaiamman kovil street, Madras-600 094. Printer : L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras—600 024.

# இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் வடிப்பவர்கள் இங்கு வந்துள்ள தமிழர்களுக்கு இன்னல் விளைவிப்பதா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கள் உரியவருக்கு வந்து சேருமா என்பதே சந்தேகம்

இப்படி சேராமல்போன லக்கேஜ்கள் எத்தனையோ உண்டு.

## காணாமல் போகும் லக்கேஜ்கள்

மண்டபமுகாமில் லக்கேஜ் செய்யப்படும் பெட்டிகள் கைக்கு கிடைத்தால்தான் நிச்சயம். லக்கேஜ் செய்யப்படும் பெட்டிகள் காலங்கடந்து கிடைக்கின்றன அப்படி உரிய இடத்திற்கு வந்து சேர்கின்ற போது மொத்தப் பெட்டிகள் கிடைப்பதில்லை ஒருவருக்கு ஒன்று மேற்பட்ட பெட்டிகள் வரும்போது ஒரு பெட்டி அல்லது அதற்கு மேற்பட்ட பெட்டிகள் வந்து சேர்வதில்லை பின் அப்படி வரத் தவறிய பெட்டிகள் வராமலே போய் விடுகின்றன? சில லேனோகளில் பெட்டிகள் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டும் இருக்கும்.

சம்பந்தபட்ட அதிகாரிகளோ இருக்கும் பெட்டிகளை எடுத்துக்கொள்ளுங்கள் வராத அல்லது கிடைக்காத பெட்டிக்கு புகார் ஒன்று எழுதிக் கொடுங்கள் என்று வாங்கிக் கொள்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் எல்லாப் பெட்டிகளுக்கும் ஒரே ரசீது தான். கொடுக்கப்படுகிறது இருக்கும் பெட்டிகளை பெறும் போது இல்லாத பெட்டிக்கும் சேர்த்தே கையெழுத்திட்டு வாங்கிக் ! கொள்கிறார்கள் இது குறித்து கேட்டால் அதற்கு 'பொறுப்பேற்க' வே மறுத்துவிடுகின்றனர் இதனால் காணாமல் போகும் பெட்டிக்கு புகார் எழுதிக் கொடுத்தாலும் அதற்கு எந்த நடவடிக்கைக்கும் எடுக்கப்படுவதில்லை. காணாமல் போனது, போனது தான். அதற்கு நஷ்டஈடு கூட கிடைப்பதில்லை இதுமாதிரி நூற்றுக்கணக்கான பேர்கள், ஆயிரக்கணக்கான பெருமதியான தமது பொருட்களை இழந்திருக்கிறார்கள் அவர்களுக்காக சம்பந்தப்பட்ட ரயில்வே அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

## இடைத் தரகர்களின் முறைக் கேடுகள்

குடிப்பெயர்ந்து வருவோருக்கு 'உதவிகள் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இடைத்தரகர்கள் பலர் அவர்களை அணுகி ஏமாற்றுகிறார்கள் தமிழ் நாட்டில் பிறபகுதிகளில் வேலை வாங்கித்தருகிறோம், நிலம் வாங்கிக் கொடுப்போம், விடு கட்டி கொடுப்போம் என அவர்களுக்கு ஆசை வார்த்தைகளை காட்டி அவர்களை தப்பான வழிக்கு இழுத்துச் செல்கிறார்கள்.

இதனால் அரசு மறுவாழ்வு திட்டங்கள் மூலம் அளிக்கும் உதவிகளைக் கூட பலர் இழந்திருக்கிறார்கள் அரசு அளிக்கும் உதவிகளை தவறுகப் புரிந்துக் கொண்டு குடியேற்றப்படவிருக்கும் இடங்களுக்கு செல்ல அச்சப்பட்டு வழங்கும் வாய்ப்பை இழக்கிறார்கள்.

அவர்களை அணுகும் இடைத்தரகர்கள் எப்படியேனும் அவர்கள் மறுவாழ்வு உதவிகள் பெற வழங்கப்படும் குடும்ப அட்டைகளை சேகரித்து கொண்டுச் சென்று துஷ்பிரயோகம் செய்து விடுகிறார்கள் அவர்களை நம்பிப் போவோரும் ஏமாந்து போய் தங்கள் மறுவாழ்வினை அமைத்துக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்—இது மண்டபம் கேம்ப்பில் மட்டுமல்ல; திருச்சி கொட்டப்பட்டு கேம்பிலும் நடைபெறுகின்றது.

## உடமைகள் கொள்ளை

முகாம்களில் தங்கி இருக்கும் குடிப்பெயர்ந்து வந்த மக்களின் உடமைகள் கூட திருட்டு போயிருக்கின்றன! பெண்கள் கூட பயமின்றி இருக்க முடிவதில்லை— கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் கூட நடைபெற்றிருப்பதாக சொல்லப்படுவது கவலைக் குறியதாகும்— கடல் கடந்த நாட்டில் சிங்களவர் மத்தியில் தான் இப்படி யென்றால் சொந்த மண்ணில் கூட இப்படியா?' என்று கேட்கும் அளவிற்கு பலர் இன்னல்களை அடைகிறார்கள்.

இவர்களது முறைக்கேடுகளை எதிர்த்தால் குண்டர்கள் வைத்து தாக்குவார்கள்' இது போன்ற சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன; 'பண வசதி படைத்த இவர்கள் கும்பலாக குண்டர்களை வைத்து தாக்கும் அளவுக்கு பலம் வாய்ந்தவர்களாகஇருக்கிறார்கள் இலங்கை இருந்து வருகிறவர்கள் விபரம் அறிந்தவர்களாக இருந்தாலும் இவர்களது நடவடிக்கை கண்டு வாளாதிருந்து விடுகிறார்கள்.

## அதிகாரிகள் காவலர்கள் அலட்சியம்

பாதிக்கப்பட்டவர்கள்-பாதிக்கப்படுகிறவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டாலும் பிரயோசனயில்லை அவர்களது நெருக்கடிகள், பிரச்சனைகள் குறித்து அதிகாரிகள் நடவடிக்கைஎடுப்பதில்லை.

போலீஸாரிடம் முறையிட்டாலும் தக்க நடவடிக்கை எடுப்பதில்லையாம், சில வேளைகளில், வேலியே பயிரை மேய்ந்து விடுவதுபோல இந்த சமூக விரோதிகளுக்கு துணைப் போய் விடுவதாகவும் கொடுக்கப்படும் புகார்களை கவனிப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது

(11-ம் பக்கம் பார்க்க)

MAKKAL MARUVAZHVU (Tamil Monthly) Regd No. TN MS (C) / 702

மக்கள் மறுவாழ்வு

31, செங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை—600 094.